இவ்வாறாக சில கருத்துகள் சொல்லப்பட, இறுதியாக மைக் பிடித்த தலைவர் எஸ்.ஏ.சந்திர சேகரன் யாரும் எதிர்பார்க்காத வகையில், ''பெப்ஸிக்கும் எங் களுக்கும் இனி எந்தச் சம்பள ஒப்பந்தமும் கிடையாது. யாரை வைத்து வேண்டுமானாலும் படப் பிடிப்பை நடத்திக் கொள்ளலாம்'' என்று அறிவிக்கவே, தொடங்கி யது பெப்ஸிக்கும், தயாரிப்பாளர் சங்கத்துக்குமான முட்டல்கள்... மோதல்கள்....

அடுத்து பத்திரிகையாளர்க ளைக் கூட்டிப் பேசிய பெப்ஸி அமைப்பின் தலைவர் எம்.ஏ.ராம துரை, செயலாளர் சிவா போன் றோர், '' புதிய சம்பள ஒப்பந்தத்தை நிறைவேற்று வதில் தயாரிப்பாளர் சங்கம் கால தாமதம் செய்த தால் மட்டுமே, புதிய சம்பள அறிவிப்பை நாங்கள் வெளியிட்டோம். அதை ஏற்று பல தயாரிப்பாளர் கள் எங்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்து படப் பிடிப்பை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில், வெளியாள்களை வைத்து வேலை செய்வோம் என் கிறார்கள். அப்படிச் செய்தால் எங்கள் போராட்டம் தீவிரமடையும்'' என்றனர்.



சுந்தர்.சி

தொடர்ந்து அடுத்தடுத்த தினங்களில், இரு தரப் பிலும் நடந்த கூட்டங்களின் முடிவுகள் சினிமா வட் டாரத்தில் பரபரப்பைக் கூட்டியிருக்கிறது.

### இது குறித்து இரு தரப்பிலும் சொல்லப்படுவது என்ன?

''சினிமா தொழில் முன்பு மாதிரி இல்லை. எந்தப் படம் எடுத்தாலும், ஓடி விடும் நிலை ஒரு காலத்தில் இருந்தது. ஆனால் இப்போது கடும் விமர்சனங்க ளைத் தாண்டியே ஒரு படம் வெற்றி நிலைக்கு வருகி றது. ஒரு வாரம் படம் ஓடினாலே போதும், போட்ட காசை எடுத்து விடலாம் என்கிற நிலை. இருந்தும், அந்த ஒரு வாரம் கூடப் படங்கள் தியேட்டர்களில் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

அவுட்டோர் ஷூட்டிங் என் றால், சென்னையில் இருந்து தொழிலாளர்களை வாகனத்தில் அழைத்துச் செல்வது, தங்குவ தற்கு அறை, சாப்பாடு, மருத்து வச் செலவுகள், ஷூட்டிங் இல் லாத நாள்களுக்கும் பேட்டா எனக் கொடுத்து வருகிறோம். இப் போது மதுரை, தஞ்சாவூர், சேலம், திண்டுக்கலில் தனித்தனியாக சினிமா யூனிட், டப்பிங் தியேட் டர், தொழிலாளர்கள் இருக்கிறார் கள். அவர்களையெல்லாம் நாங் கள் பயன்படுத்த தொடங்கினால் என்னவாகும் என்பதை பெப்ஸி யோசிக்க வேண் டும்.

ஷூட்டிங் ஸ்பாட் வேலைக்கு வரும் ஒருவருக் குத் தயாரிப்பாளரே தன் காரைக் கொடுத்தாலும் ஏற்க மாட்டேன், யூனியனில் இருக்கும் காரைத் தான் பயன்படுத்த வேண்டும் என்கிறார்கள். இது போன்று நிறைய விஷயங்கள் தயாரிப்பாளருக்குப் பெரும் செலவை ஏற்படுத்தி வருகிறது.

கோடிக்கணக்கான ரூபாய் செலவில் படமெடுக் கும் தயாரிப்பாளருக்குச் சில விஷயங்கள் பெரிது இல்லைதாம். ஆனால் எதற்கு நாங்கள் இப்படிக் கொடுக்க வேண்டும்?

டிஜிட்டல் கேமிராவில் படம் பிடிக்கும் போது லைட் மேன் தேவையே இல்லை. அந்தத் தொழில் நுட்பத்தினால்தான் 'அரவான்' படத்தை எடுத்து வருகிறார்கள். அது போல்தான் இப்போது நிறைய படங்கள் உருவாகின்றன. பெரிய தயாரிப்பாளர் என்றால் பிரச்னை இல்லாமல் வேலை பார்க்கிறார் கள். சாதாரண தயாரிப்பாளர் என்றால் மிரட்டுகி றார்கள். ஸ்டில் கேமிராவிலேயே படம் பிடிக்கும் அளவுக்கு சினிமா வளர்ந்து விட்டது. சென்ற ஆண்



பெப்ஸி நிர்வாக கூட்டத்தில்...